## கணக்கு தீர்ப்பதற்கான வாய்ப்புகள்

- நீங்கள் முதிர்வு பயன்களை 5 ஆண்டு காலத்தில் தவணைகளில் (பாலிசிதாரரின் விருப்பப்படி வருடாந்திரம், அரைவருடாந்திரம், காலாண்டு அல்லது மாதாந்திரமாக செலுத்தக் கூடியது) பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.
- பாலிசிதாரருக்கு வழங்கப்படும் நிலுவையில் உள்ள ஒவ்வொரு தவணைகளும் சிங்கிள் பிரீமியமின் ஃபண்ட் மதிப்பு மற்றும் டாப் அப் பிரீமியம் ஃபண்ட் மதிப்பு ஏதாவது இருந்தால் அந்த தவணைகளின் எண்ணிக்கையால் வகுக்கப்படும்.
- தவணை தேதியில் பொருந்தும் யூனிட் விலையிலான நிதியிலிருந்து மீட்கப்படும் யூனிட்களால் தவணை செலுத்தப்படும்.
- கணக்கு தீர்ப்பதற்கான காலத்திலான முதலீட்டு அபாயம் பாலிசிதாரரால் ஏற்றுக்கொள்ளபடுகிறது.
- கணக்கு முடிக்கப்படும் வாய்ப்புக்கான காலத்தில் கிடைக்கும் அபாய பாதுகாப்பு இன்மை அல்லது கூடுதல் துணை பயன்கள் பாதுகாப்பு கிடைக்காது.
- இறப்புக் கட்டணம் மற்றும் துணை பிரீமியம் கட்டணம் ஏதாவது இருந்தால், அவை தவிர அனைத்து கட்டணங்களும் கணக்கு முடிக்கப்படும் வாய்ப்புக்கான காலத்தின்போதான நிதியின் யூனிட்கள் மீட்சி பெறுவதன் மூலமாக கழிக்கப்படும்.
- கணக்கு முடிக்கப்படும் வாய்ப்புக்கான காலத்தில் உயிர்வாழும்போது பகுதியாக எடுக்கவோ அல்லது மாற்றிக்கொள்வதற்கோ அனுமதிக்கப்படவில்லை.
- மாறாக, கணக்கு தீர்க்கப்படும் காலத்தில் எந்த நேரமும் நீங்கள் சிங்கிள் ஃபண்ட் மதிப்பு மற்றும் ஏதாவது டாப் அப் பிரீமியம் மதிப்பை முழுமையாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை பெறுவீர்கள். பாலிசியில் நிலுவையில் உள்ள மொத்த யூனிட்களின் எண்ணிக்கை முழுவதுமாக எடுக்கப்படும் தேதியிலான யூனிட் விலையால் பெருக்கப்பட்டு ஃபண்ட் வேல்யூ கணக்கிடப்படும்.

## 'பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷூரன்ஸ் பிளான்' திட்டத்தின் முக்கிய விவரங்கள்

| அளவீடுகள் | விவரங்கள் | |
|---|---|---|
| நுழையும்போதான குறைந்தபட்ச வயது | 7 வயது (அனைத்து கூடுதல் துணை பயன்கள் எடுக்கப்படும்பட்சத்தில் 18 ஆண்டுகள்) | |
| நுழையும்போதான அதிகபட்ச வயது | 65 வயது (அனைத்து கூடுதல் துணை பயன்கள் எடுக்கப்படும்பட்சத்தில் 50 ஆண்டுகள்) | |
| அதிகபட்ச முதிர்ச்சி வயது | முழு வாழ்க்கை பிளான். 75 வயதில் பாலிசி முதிர்ச்சியடையும். | |
| நிறுத்தும் வயதில் கூடுதல் துணை பயன்கள் | அனைத்து துணை பாலிசிகளுக்கும் 65 வயது | |
| பாலிசியின் காலம் | (நுழையும்போது 75-ஐ கழித்து) பாலிசியின் காலமாக கொண்ட முழு வாழ்க்கை பிளான் | |
| குறைந்தபட்ச சிங்கிள் பிரீமியம் | நுழையும்போதான வயது | குறைந்தபட்ச சிங்கிள் பிரீமியம் |
| | 7-60 வயது | ரூ. 25,000 |
| | 61-65 வயது | ரூ. 50,000 |
| அதிகபட்ச சிங்கிள் பிரீமியம் | ரூ. 330,000 | |
| அதிகபட்ச டாப் அப் பிரீமியம் | ரூ. 5,000 | |
| குறைந்தபட்ச உறுதியளிக்கப்படும் தொகை | நுழையும்போதான வயது | குறைந்தபட்ச உறுதியளிக்கப்பட்ட தொகை |
| | 7-44 வயது | 1.25 மடங்கு சிங்கிள் பிரீமியம் |
| | 45-65 வயது | 1.10 மடங்கு சிங்கிள் பிரீமியம் |
| அதிகபட்ச உறுதியளிக்கப்படும் தொகை | 5 * மடங்கு சிங்கிள் பிரீமியம் | |

## முன்னதாக முடித்துக்கொள்ளுதல்

பாலிசியின் ஐந்தாம் ஆண்டுக்கு பிறகு எந்த நேரத்திலும், உங்களது சிங்கிள் பிரீமியம் ஃபண்டின் மதிப்பு எந்தவொரு கட்டணத்தையும் கழித்துக்கொள்ள போதுமானதாக இருப்பதில்லை. அதுபோன்ற போதுமானதாக இல்லாத தேதியில் எஞ்சியுள்ள ஃபண்ட் வேல்யூ உடனடியாக உங்களுக்கு கொடுக்கப்படும் மற்றும் பாலிசி முடிவுக்கு வரும்.

## பாலிசி முடிவுக்கு வருவது

பின்வரும் நிகழ்வுகள் முன்னதாக நடைபெறும்போது பாலிசி தானாகவே முடிவுக்கு வரும்:

- பாலிசியில் உள்ள யூனிட்கள் முழுவதுமாக சமர்ப்பிக்கப்படும்போது;
- காப்பீடு எடுத்துள்ளவர் மரணமடையும்போது;
- முதிர்ச்சி செயல்முறைகளுக்கான கட்டணம் செலுத்தப்படும்போது;
- பாலிசி முன்னதாக முடிவுக்கு வரும்போது

## இலவச பரிசீலனை காலம்

நீங்கள் பாலிசியின் ரசீதை பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் நீங்கள் பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பரிசீலனை செய்யவும் பாலிசியை திருப்பி கொடுக்கவும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் ஏதாவது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளாவிட்டால், நீங்கள் ஆட்சேபம் தெரிவிப்பதற்கான காரணங்களை கூறி பாலிசியை திருப்பி கொடுக்கலாம். நீங்கள் செலுத்திய பிரீமியமை திருப்பி பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது. நீங்கள் பாதுகாப்பை பெற்ற காலத்திற்கான அபாய பிரீமியம் மற்றும் மருத்துவ பரிசோதனை மற்றும் ஸ்டாம்ப் டூட்டிக்கு ஆன செலவுகள் கழித்துக்கொள்ளப்பட்டு மீதியுள்ள பிரீமியம் தொகை அளிக்கப்படும். யூனிட்களை ஒதுக்கீடு செய்தது மற்றும் மீட்கப்பெற்றது ஆகிய தேதிகளுக்கு இடையில் யூனிட்டின் விலையில் வீழ்ச்சி/உயர்வுக்கு ஏற்ப உங்களுக்கு அளிக்கப்படும் திருப்பி தரப்படும் தொகை குறைக்கப்படும் / அதிகரிக்கப்படும் (ஏதாவது பிரீமியம் ஒதுக்கீட்டு வீதம் அல்லது கட்டணத்தை குறிப்பிடாமல்).

## வரிப் பயன்கள்

செலுத்தப்பட்ட பிரீமியம்கள் வருமானவரிச் சட்டம் 80சி பிரிவின் கீழாக வரிப்பயன்களுக்கு தகுதி பெறுபவை ஆகும். முதிர்ச்சி பயன், இறப்பு பயன் மற்றும் சரண்டர் வேல்யூ ஆகியவை வருமானவரிச் சட்டம் 10(10)டி பிரிவின் கீழாக வரிப்பயன்களுக்கு தகுதி பெறுபவை ஆகும்.

## பொதுவான விலக்குகள்

அபாய பாதுகாப்பு ஆரம்பித்த தேதியிலிருந்து ஒரு ஆண்டுக்குள் காப்பீடு எடுத்துள்ளவர் தற்கொலை செய்துகொள்ளும்பட்சத்தில் அளிக்கப்படும் தொகை ஃபண்ட் வேல்யூவாக இருக்கும்.

## கட்டணங்கள்

- **பிரீமியம் ஒதுக்கீடு கட்டணம்:** ஒரு குறிப்பிட்ட சதவீத சிங்கிள் பிரீமியம்கள் தற்போதைய யூனிட் விலையில் வாங்க ஒதுக்கீடு செய்யப்படும். இது பிரீமியம் ஒதுக்கீட்டு வீதம் என்று அழைக்கப்படுகிறது. மீதியுள்ள தொகை பிரீமியம் ஒதுக்கீடு செய்வதற்கான கட்டணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிரீமியம் ஒதுக்கீட்டு வீதங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

  சிங்கிள் பிரீமிம் மற்றும் டாப் அப் பிரீமியம்களுக்கு ஒதுக்கீட்டு வீதம் 98%
- **பாலிசி நிர்வாக கட்டணம்:** முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் சிங்கிள் பிரீமியமில் 1.50%, கிடை மட்டமாக ஆண்டுக்கு 5% மற்றும் அதன் பிறகு ஒன்றுமில்லை.

  இந்த கட்டணம் ஒவ்வொரு ஆண்டு மாதத்திலும் யூனிட்களை ரத்து செய்து விட்டு கழிக்கப்படும்.
- **ஃபண்ட் நிர்வாக கட்டணம் (எஃப்எம்சி):**

| ஃபண்டின் பெயர் | ஆண்டு ஃபண்ட் நிர்வாக கட்டணம் |
|---|---|
| ஈக்விட்டி குரோத் ஃபண்ட் | 1.35% |
| அக்செலரேட்டர் மிட் கேப் ஃபண்ட் | 1.35% |
| பியூர் ஸ்டாக் ஃபண்ட் | 1.35% |
| அஸ்செட் அல்லகேஷன் ஃபண்ட் | 1.25% |
| ஈக்விட்டி இண்டெக்ஸ் ஃபண்ட் | 1.25% |
| லிக்விட் ஃபண்ட் | 0.95% |
| பாண்ட் ஃபண்ட் | 0.95% |

கட்டணம் யூனிட் விலையில் சரிசெய்யப்படும்.

- **மாறுவதற்கான கட்டணம்:** இல்லை, இந்த பிளான் எண்ணற்ற மாறுதல்களை (ஸ்விட்ச்) அளிக்கிறது.
- **சரண்டர் செய்வதற்கான கட்டணம்:** சரண்டர் செய்வதற்கு கட்டணமில்லை.
- **இதர கட்டணம்:** உறுதியளிக்கப்பட்ட தொகையை குறைப்பது, பகுதியாக எடுத்துக்கொள்ளுதல் மற்றும் பாலிசி ஆவணத்தின் நகல் ஆகியவற்றை பொறுத்தவரை ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் ரூ. 100/-
- **இறப்பு கட்டணம்:** இறப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டின் மாதத்திலும் யூனிட்களை ரத்து செய்து கழித்துக்கொள்ளப்படும். மாதிரி இறப்பு கட்டணம் ஆரோக்கியமான ஒரு ஆணின் ஆயுளுக்கான அபாயத்தில் தொகையின் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் கீழ்க்கண்ட வகையில் இருக்கும்:

| வயது(ஆண்டுகள்) | 20 | 30 | 40 | 50 |
|---|---|---|---|---|
| ரூ. | 1.57 | 1.74 | 2.82 | 6.53 |

அபாயத்திற்கான தொகை = உறுதியளிக்கப்பட்ட தொகை - ஃபண்ட் வேல்யூ

- துணை கட்டணம்: துணை கட்டணங்களுக்கான விவரங்களுக்கு தயவுசெய்து சம்பந்தப்பட்ட கூடுதல் துணை பயன்கள் பிரசுரத்தை பார்க்கவும்.
- கட்டணங்கள் மீதான சேவை வரி: இறப்பு கட்டணம், ரைடர் பிரீமியமிற்கான கட்டணம் மற்றும் ஃபண்ட் மேனேஜ்மெண்ட் கட்டணம் ஆகியவற்றிற்கு சேவை வரி விதிக்கப்படும்.

## கட்டணங்களை மாற்றுதல்

- ஐஆர்டிஏவில் அனுமதி பெற்றபின், நிறுவனம் மேலே குறிப்பிட்ட கட்டணங்களை மாற்றும் உரிமையை தக்க வைத்துக்கொள்கிறது.
- நீங்கள் மாற்றப்பட்ட கட்டணங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், நீங்கள் உடனடியாக அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் இதில் எது பின்னர் நடக்கிறதோ அப்போது பிளானில் உள்ள யூனிட்களை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவீர்கள். அதன் பின்னர் பாலிசி முடிவுக்கு கொண்டு வரப்படும்.

## திட்டத்தின் யூனிட்களில் செய்யப்படும் முதலீட்டின் அபாயங்கள்:

காப்பீடு கோருபவர் / ஆயுள் உறுதியளிக்கப்பட்டவர் யூனிட் லிங்க்ட் ஃபண்ட் மற்ற அபாயங்களுக்குள் பின்வருவனவற்றிற்கு உட்பட்டவை என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். நிறுவனத்துடன் எந்தவித யூனிட் லிங்க்ட் இன்ஷூரன்ஸ் ஒப்பந்தம் செய்துகொள்ளும் முன்பாக மற்றும் முழுவதும் புரிந்துகொள்ள வேண்டும்.

- யூனிட் லிங்க்ட் இன்ஷூரன்ஸ் திட்டங்கள் பாரம்பரிய இன்ஷூரன்ஸ் திட்டங்களிலிருந்து வேறுபட்டவை மற்றும் அபாய காரணிகளுக்கு உட்பட்டவை.
- யூனிட் லிங்க்ட் இன்ஷூரன்ஸ் பாலிசிகளுக்கு செலுத்தப்பட்ட பிரீமியம் கேபிடல் மார்க்கெட்கள் உடன் தொடர்புகொண்ட முதலீட்டு அபாயங்களுக்கு உட்பட்டவை மற்றும் யூனிட்களின் யூனிட் விலை ஃபண்ட்களின் செயல்பாடு மற்றும் கேபிடல் மாட்கெட் மீது ஆதிக்கம் செலுத்தும் காரணிகளுக்கு ஏற்ப ஏற்ற இறக்கம் அடையலாம். மேலும் உங்களது முடிவுகளுக்கு நீங்களே பொறுப்பாளிகள்.
- பஜாஜ் அலையன்ஸ் இன்ஷூரன்ஸ் காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மட்டுமே மற்றும் பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷூரன்ஸ் பிளான் பாலிசியின் பெயர் மட்டுமே மற்றும் அது எந்த வகையிலும் பாலிசியின் தரம், எதிர்கால வளர்ச்சி அல்லது வருவாய்களை குறிப்பிடாது.
- தயவுசெய்து உங்களது திட்ட ஆவணத்திலிருந்து அல்லது நிறுனம், உங்களது இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட் அல்லது உங்களது இன்ஷூரன்ஸ் நடுவரிடம் ஆலோசனை செய்து இது தொடர்பான அபாயங்கள் மற்றும் பொருந்தும் கட்டணங்களை அறிந்துகொள்ளவும்.
- ஈக்விட்டி இண்டெக்ஸ் ஃபண்ட், அக்செலரேட்டர் மிட்-கேப், ஈக்விட்டி குரோத் ஃபண்ட், அஸ்செட் அல்லோகேஷன் ஃபண்ட், பாண்ட் ஃபண்ட், லிக்விட் ஃபண்ட் மற்றும் பியூர் ஸ்டாக் ஃபண்ட் ஆகியவை பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷூரன்ஸ் பிளான் கீழாக வழங்கப்படும் ஃபண்ட்களின் பெயர்களே மற்றும் எந்த வகையிலும் அவை ஃபண்ட்களின் தரம், அவற்றின் எதிர்கால வளர்ச்சி அல்லது வருவாய்களை குறிப்பிடாது.
- யூனிட்களில் செய்யப்பட்ட முதலீடுகள் சந்தை மற்றும் இதர அபாயங்களுக்கு உட்பட்டவை மற்றும் ஃபண்ட்களின் எந்தவித நோக்கங்களும் செய்து முடிக்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்க முடியாது.
- இந்த பாலிசியின் கீழாக கொடுக்கப்படும் அனைத்தும் பயன்களும் அவ்வப்போது நடைமுறையில் உள்ள வரிச்சட்டங்கள், மற்ற நிதிச் சட்டங்களுக்கு உட்பட்டவை.
- நிறுவனத்தின் ஃபண்ட்களின் கடந்த கால செயல்பாடு இந்த ஃபண்ட்களின் ஏதாவதின் எதிர்கால செயல்பாட்டை காட்டுவதாக இருக்காது.


தொடர்பு விவரங்கள்

பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
சி.ஈ. பிளாசா, ஏர்போர்ட் ரோடு, எரவாடா, புனே - 411 006.
தொ: (020) 6602 6777. ஃபேக்ஸ்: (020) 6602 6789.
www.bajajallianz.com

SMS LIFE@56070


எந்தவொரு கேள்வியையும் கேட்க தொடர்புகொள்ளவும்

| பிஎஸ்என்எல்/எம்டிஎன்எல் (டோல் ஃப்ரீ) | எந்தவொரு மொபைல் & லேண்ட் லைன் (டோல் ஃப்ரீ) | மற்றவை (கட்டணத்திற்கு செலுத்துவது) |
|---|---|---|
| 1800 22 5858 | 1800 209 5858 | [illegible] 3030 5858 |

| email: life@bajajallianz.co.in | chat: bajajallianzlife.co.in/chat |
|---|---|

### எதற்காக பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்ஷூரன்ஸ்?

[illegible]

### செக்‌ஷன் 45

[illegible]

### ரிபேட்டிற்கான தடை: 1938ம் ஆண்டு மாநிலங்கள், இன்ஷூரன்ஸ் சட்டத்தின் 41-வது பிரிவு:

[illegible]

**அதிக விவரங்களுக்கு:** [illegible]

| | | |
|---|---|---|
| பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷூரன்ஸ் பிளான் (யூஐஎன்) | : | 116L096V01 |
| யூஎல் ஏடிபி(யூஐஎன்) | : | 116A013V01 |
| யூஎல் ஏபிடிபிடிபி (யூஐஎன்) | : | 116A014V01 |

காப்பீடு தனிநபரின் விருப்பத் தேர்வுக்கு உட்பட்டது.
இந்த விளக்க பிரசுரம், ஆங்கில பிரசுரத்தின் மொழிபெயர்ப்பாகும். ஏதாவது கருத்துவேறுபாடு ஏற்படும் நிலையில் ஆங்கில பிரசுரமே இறுதியானதாக எடுத்துக் கொள்ளப்படும்.

BJAZ-PB-0223/2-Sep-10

Unit Linked Insurance Plan
ULIP

லைஃப்
தனிநபர்

முன்பு



பின்பு



# பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷூரன்ஸ் பிளான்

BAJAJ | Allianz

"இந்த பாலிசியில், முதலீட்டு இலாகாக்களில் உள்ள அபாயம் பாலிசிதாரரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது"

## பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷ்யூரன்ஸ் பிளான்

"இந்த பிளான் உங்களது ஆயுளுக்குமான இன்ஷ்யூரன்ஸ் மற்றும் முதலீட்டு தேவைகளை கவனித்துக்கொள்கிறது"

இன்ஷ்யூரன்ஸ் பற்றிய அனுபவ அறிவு என்னவென்றால் நீங்கள் ஆரம்பத்தில் சம்பாதிக்கும் வருடங்களில் உங்களது இன்ஷ்யூரன்ஸ் தேவைகள் குறைவாக இருக்கும். அது பொறுப்புகள் (திருமணம், குழந்தைகள், கடன்கள் போன்றவை) அதிகரிக்கும்போது அதிகரிக்கும் மற்றும் ஓய்வு பெறும்போது குறைந்துவிடும்.
வழங்குகிறோம்... பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷ்யூரன்ஸ் பிளான், இது சிங்கிள் பிரீமியம் யூனிட் லிங்க்ட் முழு ஆயுளுக்கான திட்டமாகும். இது உங்களது வாழ்க்கையின் மாறிவரும் தேவைகளை, அதாவது கூடுதல் பாதுகாப்பு, முதலீடு செய்ய அதிக பணம், திடீர் ரொக்கப்பண தேவை அல்லது ஓய்வுக்கு பின்னர் நிலையான வருமானம் போன்ற தேவைகளை கவனித்துக்கொள்ளக் கூடியது.

இந்த திட்டம் நீங்கள் உங்களது மாறிவரும் தேவைகளைப் பற்றி கவலைப்படாமல் இருக்க உங்களுக்கு அதிகபட்ச வளைந்து கொடுக்கும் தன்மையை கொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## முக்கிய அம்சங்கள்

இந்த திட்டம் உங்களுக்கு கீழ்க்கண்ட பயன்களை வழங்குகிறது:

- ஐந்து ஆண்டுகள் முடியும்போது 7% வரை லாயல்டி அடிஷன்.
- உங்களது அபாய தேர்வின்படி முதலீடு செய்வதற்கான 7 இன்வெஸ்ட்மென்ட் ஃபண்ட்களின் வாய்ப்பு.
- வரம்பற்ற டாப்-அப் பிரீமியம்களை செலுத்த மற்றும் பகுதியாக எடுத்துக்கொள்ள வளைந்து கொடுக்கும் தன்மை
- முதிர்ச்சி செயல்முறைகளை கணக்கும் தீர்க்கும் வாய்ப்பாக பெறும் வளைந்துகொடுக்கும் தன்மை
- உங்களது உறுதியளிக்கப்பட்ட தொகையை குறைக்கும் வளைந்துகொடுக்கும் தன்மை
- உங்களது முதலீட்டை சிறப்பாக நிர்வகிக்க முறையான மாறுதலுக்கான (சிஸ்டமேடிக் ஸ்விட்சிங்) வாய்ப்பு
- உங்களது பாதுகாப்பை அதிகரிக்க விருப்ப அடிப்படையிலான கூடுதல் துணை பயன்கள்

## பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷ்யூரன்ஸ் எவ்வாறு வேலை செய்கிறது ?

- நீங்கள் செலுத்தும் சிங்கிள் பிரீமியம் மற்றும் ஏதாவது டாப் அப் பிரீமியம், நிகர பிரீமியம் அலகேஷன் கட்டணம் ஆகியவை உங்களது விருப்பப்படி ஃபண்ட்(களில்)-ல் முதலீடு செய்யப்படுகிறது. நடப்பில் உள்ள யூனிட்டின் விலையில் யூனிட்கள் உங்களது பலிசி கணக்கிற்கு ஒதுக்கப்படுகின்றன. உங்களது பாலிசியின் மதிப்பு நீங்கள் ஃபண்ட்(களில்)-ல் கொண்டிருக்கும் யூனிட்களின் மொத்த மதிப்பை கொண்டதாகும்.
- இறப்பு கட்டணம், பாலிசி நிர்வாக கட்டணம் மற்றும் துணை பிரீமியம் கட்டணங்கள் (ஏதாவது இருந்தால்) ஆகியவை மாதாந்திர அடிப்படையில் யூனிட்களை ரத்து செய்து கழித்துக் கொள்ளப்படும். ஃபண்ட் நிர்வாக கட்டணம் யூனிட்டின் விலையில் சரிசெய்துகொள்ளப்படும்.

## எங்கே முதலீடு செய்யப்படுகிறது ?

பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷ்யூரன்ஸ் பிளான் நீங்கள் உங்களது அபாய தேர்வுகளுக்கேற்ப 7 முதலீட்டு ஃபண்ட்களிலிருந்து தேர்வு செய்யும் வாய்ப்பை தருகிறது:

| ஃபண்ட்கள் | முதலீட்டு நோக்கம் | அஸ்ஸெட் கிளாஸ் | | | அபாய வரலாறு |
|---|---|---|---|---|---|
| | | வங்கி டெபாசிட்கள் மற்றும் பணச் சந்தை திட்டங்கள்* | ஈக்விட்டிகள்* | ஜி செக்டர்ஸ், பாண்ட்கள், ஃபிக்ஸ்ட் டெபாசிட்கள்* | |
| ஈக்விட்டி குரோத் ஃபண்ட் II | தேர்வு செய்யப்பட்ட ஈக்விட்டி முதலீட்டின் மதிப்பை உயர்த்தக் கூடிய ஈக்விட்டி ஸ்டாக்களில் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டிற்கு மதிப்புயர்வை அளிப்பது. | 0% - 40% | 60% - 100% | – | மிக அதிகம் |
| அக்ஸெலரேட்டர் மிட்-கேப் ஃபண்ட் II | மிட் கேப் பங்குகள் மற்றும் லார்ஜ் கேப் பங்குகளின் இடையே பல்வேறுபட்ட பங்குகளில் முதலீடு செய்து முதலீட்டின் மதிப்பை உயர்த்துவதாகும். குறைந்தபட்சம் 50% ஈக்விட்டி முதலீடுகள் மிட் கேப் பங்குகளில் செய்யப்படும். | 0% - 40% | 60% - 100% | – | மிக அதிகம் |
| பியூர் ஸ்டாக் ஃபண்ட் | விசேஷமாக சூதாட்டம், போட்டிகள், மது, பொழுதுபோக்கு (திரைப்படங்கள், டிவி போன்றவை), ஹோட்டல்கள், வங்கி மற்றும் நிதித்துறை நிறுவனங்களை தவிர்த்துவிடுவதற்கானது | 0% - 40% | 60% - 100% | – | மிக அதிகம் |
| அஸ்ஸெட் அலகேஷன் ஃபண்ட் | ஓரளவு முதலீட்டு அபாயம் கொண்டுள்ள தற்போதைய வருவாய் மற்றும் முதலீட்டு மதிப்புயர்வு உட்பட மொத்த வருவாயின் அளவை அதிகரித்தல். ஈக்விட்டிகள், பாண்ட்கள் மற்றும் ரொக்கப்பணம் போன்றவற்றின் இடையே அஸ்ஸெட் ஒதுக்கீடு செய்வதில் வளைந்துகொடுக்கும் கொள்கையை கொண்ட முதலீட்டு யுக்தி. மாறிவரும் நிதிச் சந்தைகள் மற்றும் பொருளாதார நிலைகளில் முதலீட்டை பெருக்க ஃபண்டின் யுக்தி இந்த அஸ்ஸெட் வகுப்புகளிடையேயான கலவையாக இருக்கும். இந்த ஃபண்ட் ஒவ்வொரு அஸ்ஸெட் வகுப்பிலும் உள்ள கவர்ச்சித்தன்மையை பொறுத்து ஈக்விட்டி, கடன் மற்றும் ரொக்கம் ஆகியவற்றின் இடையே தனது ஒதுக்கீட்டின் அளவை சரிசெய்துகொள்ளும். | 0% - 100% | 0% - 100% | 0% -100% | அதிகம் |
| ஈக்விட்டி இண்டெக்ஸ் ஃபண்ட் II | என்எஸ்இ நிஃப்டி ஆகியவற்றின் பகுதியாக உள்ள ஈக்விட்டிகளில் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டின் மதிப்பை உயர்த்துவது. | 0% - 40% | 60% - 100% | - | அதிகம் |
| பாண்ட் ஃபண்ட் | உயர் தரம் கொண்ட நிலையான வருவாய் உள்ள செக்யூரிட்டிகளில் முதலீடு செய்வதன் மூலம் வருவாயை சேர்க்கச் செய்கிறது | 0% - 100% | - | 0% - 100% | மிதமானது |
| லிக்விட் ஃபண்ட் | கடன் தீர்க்கும் பணச்சந்தை மற்றும் குறுகிய கால திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலமாக முதலீடு செய்யப்பட்ட முதலீட்டை பாதுகாப்பது | 0% - 100% | - | - | குறைவு |

*முதலீட்டு மேலாளரின் கருத்தின் அடிப்படையில் சந்தையின் நிலைமைகள், சந்தையின் வாய்ப்புகள், மற்றும் அரசியல், பொருளாதார மற்றும் இதர காரணிகளை கருத்தில் கொண்டு பணச் சந்தை செக்யூரிட்டிகளில் முதலீடு செய்வது 100% வரை உயர்த்தப்படலாம். அஸ்ஸெட் அலகேஷன் பாலிசிதாரர்களின் நலனை பாதுகாக்கும் நோக்கத்தில் செய்யப்படும்.

**பிரீமியமை தேர்ந்தெடுத்தல்:** நீங்கள் உங்களது முதலீட்டு தேவைகளுக்கு ஏற்ப ஒரு ஃபண்டில் முழுதுவதுமாக முதலீடு செய்வதை அல்லது உங்களது சிங்கிள் பிரீமியமை பல்வேறு ஃபண்ட்களில் ஒதுக்கீடு செய்வதை தேர்ந்தெடுக்கலாம். எந்தவொரு ஃபண்டிற்குமான ஒதுக்கீடு குறைந்தது 5% ஆக இருக்க வேண்டும்.

## இறப்பு பயன்

- 60 வயதுக்கு முன்பாக காப்பீடு எடுத்துள்ளவர் இறக்கும்பட்சத்தில்: அளிக்கப்படும் இறப்பு பயனாக இறப்பு தேதி அல்லது இறப்பு தகவல் நிறுவனத்தின் அலுவலகத்திற்கு வந்து சேரும் தேதியிலான ஃபண்டின் மதிப்பு இவற்றில் எது அதிகமானதோ அதிலிருந்து கடந்த 24 மாதங்களில் எடுக்கப்பட்ட தொகை போக மீதியுள்ள தொகை அளிக்கப்படும். சிங்கிள் பிரீமியம் மற்றும் டாப் அப் பிரீமியம்களுக்கான இறப்பு பயன் தனியாக கணக்கிடப்படுகிறது.
- 60 வயது ஆகும்போது அல்லது அதற்கு பிறகு காப்பீடு எடுத்துள்ளவர் இறக்கும்பட்சத்தில்: இறப்பு பயனாக 60 வயதாவதற்கு முன்பாக 24 மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட அனைத்து தொகைகளின் மதிப்பு கழிக்கப்பட்டு உறுதியளிக்கப்படும் தொகை அளிக்கப்படும். 60 வயது ஆனபின்னர் எடுக்கப்பட்ட அனைத்து தொகைகள் இறப்பு தேதி அல்லது இறப்பு தகவல் நிறுவனத்தின் அலுவலகத்திற்கு வந்து சேரும் தேதியிலான ஃபண்டின் மதிப்பு இவற்றில் எது அதிகமானதோ அதிலிருந்து கடந்த 24 மாதங்களில் எடுக்கப்பட்ட தொகை போக மீதியுள்ள தொகை அளிக்கப்படும். சிங்கிள் பிரீமியம் மற்றும் டாப் அப் பிரீமியம்களுக்கான இறப்பு பயன் தனியாக கணக்கிடப்படுகிறது.
- இறப்பு பயன் அளிக்கப்பட்ட தேதியில் பாலிசி முடிவுக்கு வரும்.

## முதிர்ச்சி பயன்

ஆயுள் காப்பீடு எடுத்துள்ளவர் 75 வயதை அடையும்போது, நீங்கள் சிங்கிள் பிரீமியமின் ஃபண்ட் மதிப்பை, ஏதாவது இருந்தால் பெறுவீர்கள். இந்த முதிர்ச்சி பயன் அளிக்கப்பட்டதும் பாலிசி முடிவுக்கு வரும்.

முதிர்ச்சி செயல்முறைகளை கடன் தீர்க்கும் வாய்ப்பாக தவணையில் பெறுவதற்கான வாய்ப்பும் உங்களுக்கு உள்ளது.

## லாயல்டி அடிஷன்

பாலிசி எடுத்து 5 ஆண்டுகளின் இறுதியில் பாலிசி நிறைவுபெறாவிட்டால், கீழே கொடுக்கப்பட்டுள்ள சிங்கிள் பிரீமியமின் சதவீதங்களுக்கு சமமான தொகையாக அப்போது நடப்பில் உள்ள யூனிட்டின் விலையில் நிறுவனம் லாயல்டி அடிஷனை ஒதுக்கீடு செய்யும்:

| சிங்கிள் பிரீமியம் | சிங்கிள் பிரீமியமின் % ஆக |
|---|---|
| 50,0000 லிருந்து 99,999 வரை | 3.00% |
| 100,000லிருந்து 249,999 வரை | 5.00% |
| 250,000 மற்றும் அதற்கு மேலாக | 7.00% |

செலுத்தப்பட்ட ஏதாவது டாப் அப் பிரீமியமிற்கு கூடுதல் அடிஷன் கொடுக்கப்படாது

## சரண்டர் பயன்

பாலிசியின் 6வது ஆண்டு முதல் நீங்கள் உங்களது பாலிசியை எப்போது வேண்டுமானாலும் சரண்டர் (சமர்ப்பித்தல்) செய்யலாம். கொடுக்கப்படும் சரண்டர் மதிப்பு பாலிசியை சரண்டர் செய்யும் தேதியிலான ஃபண்ட் மதிப்புக்கு சமமானதாக இருக்கும். முழு சரண்டர் மதிப்பு அளிக்கப்பட்டதும் பாலிசி முடிவு பெறும்.

## கிடைக்கும் கூடுதல் துணை பயன்கள்

சிறு தொகை செலுத்துவதன் மூலம் விருப்ப அடிப்படையிலான கூடுதல் துணை பயன்களை தேர்வு செய்து நீங்கள் கூடுதல் பாதுகாப்பை பெறலாம். பஜாஜ் அலையன்ஸ் வெல்த் இன்ஷ்யூரன்ஸ் பிளானில் கிடைக்கும் துணைப் பயன்கள்:

- யூஎல் ஆக்சிடென்டல் டெத் பெனிஃபிட் (யூஐஎன்: 116A014V01)
- யூஎல் ஆக்சிடென்டல் பெர்மனன்ட் டோட்டல்/ பார்சியல் டிஸ்எபிளிட்டி பெனிஃபிட் துணை பயன் (யூஐஎன்:116A014V01)

(அதிக விவரங்களுக்கு கூடுதல் துணை பயன்களுக்கான பிரசுரத்தை பார்க்கவும்)

## வரையறைகள்

ஃபண்ட் வேல்யூ: சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு தேதியிலான யூனிட் விலை மூலம் இந்த பாலிசியின் கீழான யூனிட்களின் எண்ணிக்கையை பெருக்குவதற்கு சமமானது.

சிங்கிள் பிரீமியம் ஃபண்ட் வேல்யூ: சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு தேதியிலான யூனிட் விலை மூலம் இந்த பாலிசியின் கீழான சிங்கிள் பிரீமியமின் தொடர்பான யூனிட்களின் எண்ணிக்கையை பெருக்குவதற்கு சமமானது.

டாப் அப் பிரீமியம் ஃபண்ட் வேல்யூ: சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு தேதியிலான யூனிட் விலை மூலம் இந்த பாலிசியின் கீழான டாப் அப் பிரீமியமின் தொடர்பான யூனிட்களின் எண்ணிக்கையை பெருக்குவதற்கு சமமானது.

யூனிட்டின் விலை: மதிப்பீட்டு தேதியில் உள்ள யூனிட்களின் எண்ணிக்கையால் நெட் அஸ்ஸெட் வேல்யூ(என்ஏவி)-ஐ வகுப்பதன் மூலம் கிடைப்பதே ஒரு ஃபண்டின் யூனிட்டின் விலை ஆகும்.

இறுதி நேரத்திற்குள் அன்றைய தினத்தில் வேண்டிக் கொள்ளப்பட்ட அனைத்து யூனிட் பரிமாற்றம் அன்றைய தேதியின் யூனிட் விலையின்படியே செயல்முறைப்படுத்தப்படும். இறுதி நேரத்திற்கு பின்னர் வேண்டிக் கொள்ளப்படும் யூனிட் பரிமாற்றங்கள் அடுத்த நாளின் யூனிட் விலையில் செயல்முறைப்படுத்தப்படும். யூனிட் பரிமாற்றத்திற்கான வேண்டுகோள் பிரீமியம் பேமென்ட் / சரண்டர் / பார்சியல் வித்டிராவல் / ஸ்விட்சிங் / டெத் க்ளைம் ஆக இருக்கலாம். குறிப்பிட்ட ஒரு நாளில் பொருந்தும் யூனிட் விலைக்கான தற்போதைய இறுதி நேரம் மாலை 3.00 ஆகும்.

மதிப்பீட்டு தேதி: ஒவ்வொரு நாளும் நிதிச் சந்தைகள் திறந்ததும் நாங்கள் ஃபண்ட்களை மதிப்பிடுவதை இலக்காக கொண்டுள்ளோம். இருந்தாலும், அஸ்ஸெட்களின் மதிப்பு மிகவும் நிச்சயமில்லாதபோது தீவிரமான சூழ்நிலைகளில் நாங்கள் மிக குறைந்த கால இடைவெளியிலேயே ஃபண்ட்களை மதிப்பிடலாம். அதுபோன்ற சூழ்நிலைகளில், அஸ்ஸெட்களின் மதிப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்ற நிச்சயமான உணர்வை பெறும் நாட்கள் வரை 30 நாட்கள் வரை அஸ்ஸெட் மதிப்பீடுகளில் வேறுபடலாம். ஐஆர்டிஏவிடம் முன் ஆலோசனை செய்த பின்னரே அஸ்ஸெட் மதிப்பீடு தள்ளிப்போடப்படும்.

## என்ஏவியை கணக்கிடுவது

**ஒதுக்கீட்டு விலை பயன்படுத்தப்படும்போது:** ஒரு ஃபண்ட் கொண்டிருக்கும் முதலீட்டு சந்தை மதிப்பு மற்றும் அஸ்ஸெட்களை வாங்கும்போது ஆன செலவுகள் மற்றும் ஏதாவது வழங்கப்படுதல் இருந்தால், தற்போதைய லயபிளிட்டிகளின் மதிப்பு இல்லாமல் ஏதாவது ஏற்பட்ட ஃபண்ட் மேனேஜ்மென்ட் கட்டணங்கள் நிகர வருவாய் கொண்டு என்ஏவி கணக்கிடப்படும். இது ஃபண்டின் நெல் அஸ்ஸெட் வேல்யூவை கொடுக்கிறது. மதிப்பீட்டு தேதியில் (புதிய யூனிட்கள் எதுவும் ஒதுக்கிடுவதற்கு முன்பாக) உள்ள யூனிட்களின் எண்ணிக்கையை வகுத்து எடுத்துக்கொள்ளப்படும் ஃபண்டின் யூனிட் விலை கொக்கப்படுகிறது. இது மதிப்பீட்டு தேதியில் யூனிட்களை மதிப்பிட நிறுவனம் அஸ்ஸெட்களை வாங்கும்போது பொருந்தும்.

**விற்பனை விலை பயன்படுத்தப்படும்போது:** ஒரு ஃபண்ட் கொண்டிருக்கும் முதலீட்டு சந்தை மதிப்பு, அஸ்ஸெட்களை வாங்கும்போது ஆன செலவுகள் இல்லாமல், மற்றும் ஏதாவது வழங்கப்படுதல் இருந்தால், தற்போதைய லயபிளிட்டிகளின் மதிப்பு இல்லாமல் ஏதாவது ஏற்பட்ட ஃபண்ட் மேனேஜ்மென்ட் கட்டணங்கள் நிகர வருவாய் கொண்டு என்ஏவி கணக்கிடப்படும். இது ஃபண்டின் நெல் அஸ்ஸெட் வேல்யூவை கொடுக்கிறது. மதிப்பீட்டு தேதியில் (புதிய யூனிட்கள் எதுவும் ஒதுக்கிடுவதற்கு முன்பாக) உள்ள யூனிட்களின் எண்ணிக்கையை வகுத்து எடுத்துக் கொள்ளப்படும் ஃபண்டின் யூனிட் விலை கொக்கப்படுகிறது. இது நிறுவனம் மதிப்பீட்டு தேதியில் யூனிட்களை மீட்க சொத்துக்களை விற்பனை செய்யும்போது பயன்படுத்தப்படுகிறது.

## மாதிரி விளக்கம்*

| வயது (ஆண்டுகள்) | பாலிசியின் காலம் (ஆண்டுகள்) | பிரீமியம் (ரூ.) | உறுதியளிக்கப்படும் தொகை (ரூ.) | ஃபண்ட் வேல்யூ 6% (ரூ.) | ஃபண்ட் வேல்யூ 10% (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 50 | 25 | 25,000 | 27,500 | 77,159 | 194,903 |
| | | 50,000 | 55,000 | 151,738 | 384,396 |
| | | 1,00,000 | 1,10,000 | 308,635 | 779,613 |
| | | 2,50,000 | 2,75,000 | 784,484 | 1,976,085 |

*இந்த விளக்கம் ரெகுலேட்டரின் பரிந்துரைக்கப்பட்ட வளர்ச்சி வீதத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலே கொடுக்கப்பட்டுள்ளவை 100% 'பாண்ட் ஃபண்ட்களில்' முதலீடு செய்வதை அடிப்படையாக கொண்டு கொடுக்கப்பட்டுள்ள மற்றும் சேவை வரியை உள்ளடக்கியவை.

## வளைந்துகொடுக்கும் தன்மை

இந்த திட்டம் உங்களது தேவைகளுக்கு ஏற்ப கீழ்க்கண்ட வளைந்து கொடுக்கும் தன்மைகளை உங்களுக்கு அளிக்கிறது.

**பெருந்தொகையை முதலீடு செய்வதற்கான வாய்ப்பு:**

- நீங்கள் பாலிசியின் கடைசி ஐந்து ஆண்டுகளை தவிர உங்களது ஃபண்ட் மதிப்பை உயர்த்துவதற்காக வரம்பற்ற டாப் அப் பிரீமியம்களின் மூலம் எந்த நேரமும் பெருந்தொகையை முதலீடு செய்யலாம். குறைந்தபட்ச டாப் அப் பிரீமியம் ரூ. 5,000.
- நீங்கள் செலுத்திய டாப் அப் பிரீமியம் தொகை டாப் அப் உறுதியளிக்கப்பட்ட தொகையை நிர்ணயம் செய்யும். டாப் அப் பிரீமியம் செலுத்தும்போது, நீங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டதுபடி உங்களது வயதுக்கேற்ப டாப் அப் உறுதியளிக்கப்படும் தொகையை தேர்வு செய்ய வேண்டும்.

| தற்போதைய வயது | டாப்-அப் உறுதியளிக்கப்பட்ட தொகையை பெருக்குதல் |
|---|---|
| 45 வயதுக்கும் குறைவாக | 1.25லிருந்து 5 மடங்குகள் |
| 45 வயதுக்கும் அதிகமான அல்லது சமமான வயது | 1.10லிருந்து 5 மடங்குகள் |

( தற்போதைய வயது 45க்கும் குறைவான வயதுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாய்ப்பு 1.25 மடங்குகள் மற்றும் மற்ற வயதுகளுக்கு 1.1 மடங்குகள்)

- நீங்கள் செலுத்தும் ஒவ்வொரு பிரீமியம்-க்கும் 5 (ஐந்து) ஆண்டுகள் லாக்-இன் காலமாகும். லாக்-இன் காலம் செலுத்தப்படும் ஒவ்வொரு டாப் அப் பிரீமியம் தேதியிலிருந்து பொருந்தும். இருந்தாலும், பாலிசியின் ஐந்தாவது ஆண்டுக்கு பின்னர் பாலிசி சரண்டர் செய்யப்பட்டால் அல்லது நிறுத்தப்பட்டால் டாப் அப் பிரீமியமிற்கு லாக்-இன் காலம் பொருந்தாது.
- காப்பீடு எடுத்துள்ளவரின் உடல் ஆரோக்கியத்தை சரிபார்க்க எந்தவித தகவல்கள்/ஆவணங்களை கேட்கும் உரிமையை நிறுவனம் தக்க வைத்துக்கொள்கிறது. அதற்காக காப்பீடு எடுத்துள்ளவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படலாம் மற்றும் நிறுவனம் டாப் அப் பிரீமியை ஏற்க மறுக்கலாம்.

## மாற்றும் வாய்ப்பு

- நீங்கள் நிறுவனத்திற்கு தெரிவித்துவிட்டு யூனிட்களை ஒரு ஃபண்டிலிருந்து மற்றொரு ஃபண்டிற்கு மாற்றலாம்.
- குறைந்தபட்ச மாற்றும் தொகை ரூ. 5000 அல்லது ஃபண்ட் மதிப்பு இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அதுவாக இருக்கும்.
- நிறுவனம் ஃபண்டிலிருந்து யூனிட்களை மீட்சி செய்து மாற இருக்கும் ஃபண்டின் யூனிட்களுக்கு அவற்றின் யூனிட் விலையின்படி மாற்றும்.

## பகுதியாக எடுக்கும் வாய்ப்பு

நீங்கள் கீழ்க்கண்டவற்றிற்கு உட்பட்டு பாலிசியின் ஐந்தாவது ஆண்டுக்கு பிறகு எண்ணிக்கையில்லாமல் பணத்தை எடுப்பதற்கான வாய்ப்பை கொண்டிருக்கலாம்.

- குறைந்தபட்ச பகுதியாக எடுக்கும் தொகை ரூ.5,000.
- பணத்தை பகுதியாக எடுத்த பின்னர் குறைந்தபட்ச இருப்பு ரூ. 5000 அல்லது சிங்கிள் பிரீமியமில் 5ல் 1 பாகமாக, அனைத்து ஃபண்ட்களிலும் எது அதிகமாக இருக்கிறதோ அதனை நிர்வகிக்க வேண்டும்.
- அனைத்து பகுதியாக எடுத்தல்களும் முதலில் தகுதி பெறும் டாப் அப் பிரீமியம் ஃபண்ட் மதிப்பு ஏதாவது இருந்தால் அதிலிருந்து செய்யப்பட வேண்டும். தகுதிபெறும் டாப் அப் பிரீமியம் ஃபண்ட் மதிப்பு போய்விட்டதும், மேற்கொண்டு பகுதியாக எடுத்தல் சிங்கிள் பிரீமியம் ஃபண்ட் வேல்யூவிலிருந்து செய்யப்படும்.
- பகுதியாக எடுக்க விரும்பும் ஃபண்டை(ஃபண்ட்களை) நீங்கள் தேர்வு செய்யலாம்.
- காப்பீடு எடுத்தவர் வயதுக்கு வராதவராக இருக்கும்பட்சத்தில், அவர் 18 வயதை எட்டிய பின்னர் பகுதியாக எடுக்க அனுமதிக்கப்படும்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு பகுதியாக எடுத்தலின்போதும் இதர கட்டணங்கள் பொருந்தும்.

## முறையான மாறும் வாய்ப்பு (எஸ்எஸ்ஓ)

சந்தை ஏற்ற இறக்கங்களை கொண்டிருக்கும்போது இந்த வாய்ப்பு உங்களுக்கு வருவாயை அனுகூலமாக்கும் அணுகுமுறையை கொடுக்கிறது. ஆரம்பத்தில் மட்டுமே எஸ்எஸ்ஓ பெறப்படும் மற்றும் உங்களது பாலிசியின் முதல் பன்னிரெண்டு மாதங்களுக்கு மட்டுமே பொருந்தும். உங்களது ஒதுக்கீடு செய்யப்பட்ட சிங்கிள் பிரீமியம் மற்றும் டாப் அப் பிரீமியம், ஏதாவது இருந்தால், உங்களது பாலிசியின் ஆரம்பத்தில் செலுத்தப்பட்டவை லிக்விட் ஃபண்டிற்கு ஒதுக்கப்படும். இருந்தாலும், டாப் அப் பிரீமியம்கள், ஏதாவது இருந்தால், உங்களது பாலிசி ஆரம்பிக்கப்பட்ட பிறகு செலுத்தப்பட்டவைக்கு இந்த வாய்ப்பு கிடைக்காது.

லிக்விட் ஃபண்டில் உள்ள உங்களது ஃபண்ட் மதிப்பில் X-ல் 1 மடங்கு லிக்விட் ஃபண்டிலிருந்து உங்களது விருப்பப்படியான ஃபண்ட்(களுக்கு) (ஈக்விட்டி குரோத் ஃபண்ட் II, பியூர் ஸ்டாக் ஃபண்ட், ஈக்விட்டி இண்டெக்ஸ் ஃபண்ட் II, பாண்ட் ஃபண்ட், லிக்விட் ஃபண்ட், அக்செலரேடர் மிட்-கேப் ஃபண்ட் II, அஸ்ஸெட் அலகேஷன் ஃபண்ட் ) ஒவ்வொரு ஆண்டின் மாதத்திலும், கட்டணமில்லாமல், மாற்றப்படும். இதில் X என்பது பாலிசியின் அடுத்த ஆண்டு தேதி வரை மீதியுள்ள மாதங்களின் எண்ணிக்கையாகும்.

நீங்கள் ஏதாவது மாற்றம் / பிரீமியம் ஒதுக்கீட்டை அடுத்தடுத்து செய்யும்போது எஸ்எஸ்ஓ தானாகவே ரத்து செய்யப்படும். நீங்கள் அடுத்த வருட மாதத்திற்கு குறைந்தது 15 நாட்கள் முன்னதாக நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமான அறிவிப்பின் மூலம் எஸ்எஸ்ஓவிலிருந்து வெளியேறலாம்.

## உறுதியளிக்கப்பட்ட தொகையில் குறைவு

எந்தவொரு பாலிசி ஆண்டிலும் நீங்கள் உறுதியளிக்கப்பட்ட தொகையை நுழைவின்போது 45 வயதுக்கு கீழானவர்கள் சிங்கிள் பிரீமியமில் 1.25 மடங்கு மற்றும் இதர வயதுகளுக்கு சிங்கிள் பிரீமியமில் 1.1 மடங்கு குறைத்துக்கொள்ளும் வாய்ப்பை கொண்டுள்ளீர்கள். இருந்தாலும், பாலிசியின் காலத்தில் எந்தநேரத்திலும் பாலிசிதாரரால் உறுதியளிக்கப்பட்ட தொகையை அதிகரிக்க முடியாது. கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி இந்த வாய்ப்புக்கு இதர கட்டணங்கள் பொருந்தும்.